# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2013 - 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

சுட்டெண்:.............................................................. நேரம்: 150 மணித்துளிகள்

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. எமது இனத்தின் பெருமைக்குச் சான்றாக அமைவது

______________________ .

(வாணி விழா, தைப்பொங்கல் விழா, பிறந்தநாள் விழா)

2. பண்டைத்தமிழர் வணிகம் செய்த நாடுகளில் ஒன்று

______________________ .

(கிரேக்கம், செருமனி, கனடா)

3. உயிர்களுக்கு மழையையும் வெப்பத்தையும் தருவது

______________________ .

(விண்மீன், நிலா, கதிரவன்)

4. எவரையும் பணிவுடன் வணங்குவது தமிழர்.

______________________ .

(பண்பாடு, நாகரிகம், வேறுபாடு)

5. வையகம் என்ற சொல் குறிப்பது ______________________ .

(வானம், கடல், உலகம்)

6. சிற்பக்காடு என அழைக்கப்பட்ட ஊர் ______________________ .

(கந்தபுரம், மாமல்லபுரம், மாவிட்டபுரம்)

7. தீயவர்கள் நண்பராக அமைந்தால் ____________________ விளையும்.

(நன்மை, இடுக்கண், பெருமை)

8. வாள் + படை என்பதைச் சேர்த்து எழுதினால் ________________ .
(வாள்படை, வாற்படை, வாட்படை)

9. “நான் பெற்ற ________________ பெறுக இவ் வையகம்”
(இன்பம், துன்பம், செல்வம்)

10. ________________ இசைப் போட்டியில் வெற்றி பெற்றேன்.
(நீ, நான், அவன்)

11. **பழமொழி :-** தை பிறந்தால் ________________ பிறக்கும்.
(வலி, வழி, வளி)

12. தமிழில் உள்ள மெய்யெழுத்துகள் ________________ .
(12, 18, 30)

13. ஆழமற்ற கடலைப் ________________ என்று அழைப்பர்.
(பரவை, பறவை, ஆழி)

14. குழந்தை ________________ நின்று அழுது கொண்டிருந்தது.
(சின்னஞ்சிறிய, தன்னந்தனியே, பென்னம்பெரிய)

15. ஆடற்கலையைப் பற்றிக் கூறும் நூல் ________________ .
(சிலப்பதிகாரம், புறநானூறு, வளையாபதி)

16. காளைகள் சிங்கத்தை ________________ வென்றன.
(வேற்றுமையால், ஒற்றுமையால், பிரிவினையால்)

17. கல்வீதியில் மாட்டு வண்டி ____________________ என்று சென்றது.

(கடகட, மடமட, படபட)

18. கமழ்வுப் பொருட்களில் ஒன்று ____________________ .

(அரிசி, ஏலம், மயிற்பீலி)

19. **குறள் :-**

வையத்துள் வாழ்வாங்கு ____________________ வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

(இருப்பவன், செய்பவன், வாழ்பவன்)

20. நடுகல் வழிபாடு பற்றிய செய்திகள் அதிகமாகக் காணப்படும் நூல் ____________________ .

(நாலடியார், புறநானூறு, மூதுரை)

21. தென்கிழக்காசியா எங்கும் புலிக்கொடியைப் பறக்கவிட்ட மன்னன் ____________________ .

(இராசஇராச சோழன், சேரன்செங்குட்டுவன், மாமல்லன்)

22. பயிர்கள் செழித்து வளரக் கதிரவனின் ____________________ தேவை.

(ஒளி, ஒலி, ஒழி)

23. 'பூம்புகாரின் பொற்றொடி' என அழைக்கப்பட்டவள் ____________________ .

(மணிமேகலை, கண்ணகி, மாதவி)

24. ______________________ என்றும் எமது தாய்நாட்டை மறவோம்.

(நாங்கள், நீங்கள், உங்கள்)

25. பின்வருவனவற்றுள் கடலில் செல்லும் உந்து __________________ .

(மிதியுந்து, தொடருந்து, நீருந்து)

26. ஒருவனைக் குமுகாயத்தில் அடையாளங் காட்டுவது

____________________________ .

(உடை, மொழி, செல்வம்)

27. நேற்றுக் கண்ணன் பள்ளிக்குச் ____________________________ .

(சென்றான், செல்கிறான், செல்வான்)

28. கண்பார்வை இழந்தவரும் கண்டுணரும் கலை

____________________________ .

(ஓவியம், சிற்பம், நடனம்)

29. மாட்டுப் பொங்கல் தை ___________________________ நாள் கொண்டாடப்படும்.

(இரண்டாம், முதலாம், மூன்றாம்)

30. பரதவர் என்று அழைக்கப்பட்டவர் ____________________________ .

(சோழர், சேரர், பாண்டியர்)

புள்ளிகள் 30

**2) கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.**

| | | |
|---|---|---|
| பென்னம்பெரிய | மடமட | கன்னங்கரிய |
| மளமள | பார்க்கப்பார்க்க | |

1. தங்கை வரைந்த ஓவியத்தைப் ______________________ அழகாக இருந்தது.

2. ______________________ காகம் கூட்டில் இருந்து பறந்து சென்றது.

3. வேந்தன் தாகத்தினால் நீரை ______________________ என்று குடித்தான்.

4. பலமாக வீசிய காற்றினால் ______________________ மரங்கள் முறிந்து விழுந்தன.

5. மாதவி வீட்டு வேலைகளை ______________________ என்று செய்து முடித்தாள்.

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. 'விறலியர்' எனப்படுவோர் யார்?

2. ஆழியைக் கடக்கக்கூடிய மரக்கலங்கள் இரண்டின் பெயர்களைத் தருக?

3. ஒற்றுமையே வலிமை என்ற பாடத்தில் இருந்து நீர் விளங்கிக்கொள்வது என்ன?

4. உண்மை நட்பு எத்தகையது?

5. மாமல்லபுரத்தைச் சிற்பக்காடாக்கிய மன்னனின் பெயர் என்ன?

6. சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?

7. பழந்தமிழர் அரேபியாவிலிருந்து எதை இறக்குமதி செய்தனர்?

புள்ளிகள் 10

4) **பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.**

***என்றும் அன்பாய் வாழ்ந்திடுவோம்***
***இனிய உறவைப் பேணிடுவோம்***
***ஒன்றாய்க் கூடி மகிழ்ந்திடுவோம்***
***ஒன்றுமையை நாம் வளர்த்திடுவோம்***

***உண்மை பேசி உயர்ந்திடுவோம்***
***உலகில் புகழ் அடைந்திடுவோம்***
***கண்ணைப் போலே எம் மொழியைக்***
***காத்து நாங்கள் வளம் பெறுவோம்***

***வாழும் நாட்டையும் நாம் மதிப்போம்***
***வாழிட மொழியையும் கற்றிடுவோம்***
***நாளும் பொழுதும் நாம் இணைந்து - எம்***
***நாட்டின் விடுதலைக்காய் உழைத்திடுவோம்***

1. எவ்வாறு வாழ வேண்டும் எனக் கூறப்படுகிறது?

________________________________________

2. நாங்கள் உயர்வடைய என்ன செய்யவேண்டும்?

________________________________________

3. கண்ணைப் போல எதைக் காக்க வேண்டும் எனக் கவிஞர் கூறுகின்றார்?

________________________________________

4. எதை நாம் மதிக்க வேண்டும் என்று இப்பாடலில் கூறப்பட்டுள்ளது?

________________________________________

5. எதற்காக நாம் உழைக்க வேண்டும்?

________________________________________

புள்ளிகள் 10

5) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| நூல்களைப் | தமிழருக்கும் | ஊரில் |
|---|---|---|
| ஆங்கிலக் | பற்றுக் | |

இலங்கையில் உள்ள சிறுப்பிட்டி என்னும் ________________ சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் பிறந்தார். இவர் தமிழோடு ________________ கல்வியையும் கற்றார். தனது கல்வியை முடித்துக் கொண்டு தமிழ்நாடு சென்றார். அங்குள்ள பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றார். தாமோதரம்பிள்ளை தமிழ் மீது மிகுந்த ________________ கொண்டவர். இவர் தமிழுக்காக அரும்பாடுபட்டார். பழந்தமிழ் ________________ புதுப்பித்தார். அத்துடன் இவர் 'நீதி நெறி விளக்கம்' என்ற நூலையும் எழுதினார். தாமோதரம்பிள்ளை தமிழுக்கும் ________________ செய்த தொண்டு அளப்பரியது. இவரது பேரும் புகழும் தமிழ் உள்ளவரை நின்று நிலைக்கும்.

புள்ளிகள் 10

**6) பந்தியை வாசித்து ; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

நல்ல பண்புள்ள் மாந்தனை உருவாக்குவது குடும்பம். ஒரு குடும்பத்தில் பெற்றோர், பிள்ளைகள், மூத்தோர் ஆகியோர் உள்ளனர். எனவே இவர்களிடம் ஒருவருக்காக ஒருவர் வாழும் பண்பு ஓங்கி நிற்கும். பெற்றோரின் குறிக்கோள் பிள்ளைகளின் வளர்ச்சியே ஆகும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் கல்வியிலும் உடல் நலத்திலும் பழக்கவழக் கங்களிலும் எந்நேரமும் கண்ணுங் கருத்துமாக இருப்பர். பிள்ளைகளுக்குப் பெற்றோரிடமிருந்து அன்பும் அரவணைப்பும் கிடைக்கின்றன. ஒரு குடும்பத்தில் இருப்பவர்கள் ஒரு கையில் உள்ள விரல்களைப் போல் ஒத்திசைய வேண்டும். இத்தகைய குடும்ப அமைப்பிற்குள் வளர்பவர்களே நல்ல பிள்ளைகளாக உருவாகின்றனர். இவர்கள் தாம் வாழும் குமுகாயத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றனர். எனவே நல்ல குடும்பங்கள் தான் நல்ல குமுகாயத்தை உருவாக்குகின்றன.

1. நல்ல பண்புள்ள மாந்தனை உருவாக்குவது எது?

   ______________________________________________

2. பெற்றோரின் குறிக்கோள் எது?

   ______________________________________________

3. பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்கு எவை கிடைக்கின்றன?

   ______________________________________________

4. குடும்பத்தில் இருப்பவர்கள் எதைப்போன்று ஒத்திசைய வேண்டும்?

   ______________________________________________

5. நல்ல குடும்பங்கள் எதை உருவாக்குகின்றன?

   ______________________________________________

புள்ளிகள் 10

**7) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

தை முதலாம் நாள் தைப்பொங்கல் கொண்டாடப்படும். இதுவே தமிழருடைய புத்தாண்டு நாளும் ஆகும். அன்று ஒருவரை ஒருவர் நேரில் வாழ்த்துவர். தொலைபேசியிலும் வாழ்த்துத் தெரிவிப்பர். ஒருவருக்கு ஒருவர் வாழ்த்து மடல்கள் அனுப்புவர்.

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தமிழர் தொல்வணிகம்
- தமிழர் கட்டிடக்கலை
- நீரும் உமது நண்பரும்

புள்ளிகள் 15